<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ஆம் நாள் (10.02.2021) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தொலைபேசி செய்தியில் கொடைக்கானல் வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு இ–பாஸ் பதிலாக இ–ரிஜிஸ்ட்ரேசன் போதுமானது என தமிழ், ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் விழிப்புணர்வு பதாகைகள் கெங்குவார்பட்டி செக்போஸ்ட், காமக்காபட்டி செக்போஸ்ட், பழனி செக்போஸ்ட், பெருமாள்மலை செக்போஸ்ட் மற்றும் வெள்ளிநீர் வீழ்ச்சி, வட்டகானல் செக்போஸ்ட், அப்பர்லேக் ரோடு, கலையரங்கம் வகன நிறுத்தம், மூஞ்சிக்கல் சந்திப்பு மற்றும் பிரையண்ட் பூங்கா பகுதியில் உடனடியாக அமைத்திட தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மேற்கண்ட இடங்களில் விழிப்புணர்வு பதாகைகள் அமைத்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. பிரிண்டெக் டிஜிட்டல் பிளக்ஸ், கொடைக்கானல் – ரூ.53750/– (பிரிண்டிங், பிரேம், பிட்டிங் உட்பட)

2. விசுவல் பிரிண்ட் டெக், தேனி – ரூ.54250/– (பிரிண்டிங், பிரேம், பிட்டிங் உட்பட)

வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பிரிண்ட்டெக் டிஜிட்டல் பிளக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **987, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.916, நாள்.29.10.2020–ன்படி, கொடைக்கானல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம் தனியார் மயம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு இவ்வலுவலக ந.க.எண்.3140/2016/எச்1, நாள்.31.10.2020–ன்படி 80 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களைக் கொண்டு GESM Environment Services, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தக் காலம் 31.01.2021 உடன் முடிவடையும் நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொடைக்கானல் சர்வதேச சுற்றுலாத் தலமாக இருப்பதால் நகரின் சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளம் வரை 01.02.2021 முதல் 28.02.2021 வரை ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி GESM Environment Services, Chennai நிறுவனத்தின் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்வதற்கு உரிய நீட்டிப்பு வழங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/– (பத்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3140/2016/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **988, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

3) பழனி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2020–2021 ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியர்/ தலைவரின் செயல்முறை கடிதங்கள் ந.க.எண். 3121/2020/அ5 நாள். 4.1.2021 மற்றும் 4098/2019/அ5 நாள். 06.01.2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பழனி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்துள்ள பணிகளை மேற்கொள்வதற்கு 03.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி, 23–வது வார்டு கார்மேல்புரம் சர்ச் அருகில் பொது சுகாதார வளாகம் அமைத்தல் | 7.00 | பி. சுப்பிரமணி<br>எஸ். குமரேசன் | 0.09% குறைவு<br>0.26 % அதிகம் |
| 2 | கொடைக்கானல் நகராட்சி, 2–வது வார்டு பச்சைமரத்து ஓடை முதல் நகராட்சி எல்லை வரையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.00 | ஆர். மாரியப்பன்<br>டி. பிரபாகரன் | 0.07% குறைவு<br>2.16 % அதிகம் |
| 3 | கொடைக்கானல் நகராட்சி, 21வது வார்டு பாம்பார்புரம் தெரசா பள்ளிக் கூடம் முதல் தண்ணீர் தொட்டி வரை கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல் | 5.00 | அ. அருண்மணி<br>எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | 0.03% குறைவு<br>2.75 % அதிகம் |
| 4 | கொடைக்கானல் நகராட்சி 22–வது வார்டு ஜம்ஜம் லாட்ஜ் முதல் அந்தோணியார் கோயில் சாலை வரை சிமிண்ட் சாலை அமைத்தல் | 5.00 | என்.முருகேஸ்வரி<br>பி. சுப்பிரமணி | 0.05% குறைவு<br>1.43 % அதிகம் |

அலுவலக குறிப்பு. வரிசை எண். 1 மற்றும் 4 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (கோப்பு ந.க.எண். 907/2020/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **989, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி படகு குழாமிற்கு புதிய படகுகள் வாங்குவதற்கு 4.2.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நகராட்சி படகு குழாமிற்கு துடுப்பு படகு மற்றும் Pedaling படகுகள் வாங்குதல் | 9.60 | M/s. Revelation marine & Engineering, Ernakulam<br>M/s. Annvin FPs, Ernakulam | 0.73% குறைவு<br>1.28% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **990, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கீழ்க்குண்டாறு குடிநீர் திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | சாலையின் தன்மை | நீளம் (கி.மீ)ல் | அகலம் (மீ)ல் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 24 | செண்பகனூர் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் பணி | தார்ச்சாலை | 2000 மீ | 5 மீ | 150.00 இலட்சம் |
| 2 | 6 | பில்டிங சொசைட்டி பகுதி முதல் குறிஞ்சி ஆண்டவர் கோயில் இணைப்பு வரை தார்ச்சாலை அமைக்கும் பணி | தார்ச்சாலை | 1600 மீ | 6 மீ | 150.00 இலட்சம் |
| | | மொத்தம் | | 3300 மீ | | 300.00 இலட்சம் |

இச்சாலைகளை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி சிறப்பு சாலைகள் திட்டம் மற்றும் நகராட்சி நிதியின் மூலம் சீரமைத்திட நிர்வாக அனுமதியும், மானியமும் வழஙக கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) நகராட்சி பஙகுத் தொகை நிர்வாக அனுமதியில் அறிவுறுத்தும்பட்சத்தில் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் ஈடு செய்ய மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **991, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சி படகு குழாமிற்கு புதிய படகுகள் வாஙகுவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 774 நாள். 31.3.2020 ல் ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 4.2.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நகராட்சி படகு குழாமிற்கு துடுப்பு படகுகள் வாஙகுதல் | 10.00 | M/s. Revelation marine & Engineering, Ernakulam<br><br>M/s. Annvin FPs, Ernakulam | 0.12% குறைவு<br><br>3.37% அதிகம் |
| 2 | நகராட்சி படகு குழாமிற்கு Pedaling படகுகள் வாஙகுதல் | 10.00 | M/s. Revelation marine & Engineering, Ernakulam<br><br>M/s. Annvin FPs, Ernakulam | 0.60% குறைவு<br><br>0.96% அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **992, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த முறையில் 96 பணியாளர்களை பணியமர்த்தி நகராட்சி பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணி தனியார் மூலம் மேற்கொள்ள 03.02.2021–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|
| 1 | R.B. Premier Service , No. 8/2 Kalaignar Street, Pattabiram , Chennai. | உள்ளது |
| 2 | GESM Evironment Services, 2/3. Bowden Street, Cooks Road, Chennai | உள்ளது |

அதனை தொடர்ந்து 08.02.2021 அன்று விலை விபரப்பட்டியல் திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்த விலை விபரஙகள் பெறப்படுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | R.B. Premier Service , No. 8/2 Kalaignar Street, Pattabiram , Chennai. | ரூ.665.00 (0.39% குறைவு) |
| 2 | GESM Evironment Services, 2/3. Bowden Street, Cooks Road, Chennai | ரூ. 660.50 (1.06% குறைவு) |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவல குறிப்பு. 1) விலை விபரம் குறைவாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு தொகை ரூ. 660.50 என கொடுத்துள்ள GESM Evironment Services, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். இவ்விலை விபரமானது 2020–2021 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தரவிலைப் பட்டியலைவிட குறைவாக உள்ளது.

2) பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **993, நாள். 10.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.